**<u>சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி</u>**

**<u>MCOP. 228/2023</u>**

<u>நாள் 29.04.2025</u>

**<u>இ.ம.எண். 01/2025 மனு உத்தரவின் பேரில் ம.சா.1. ஐ மீண்டும் அழைத்து முதல் விசாரணை தொடர்ச்சி:–</u>**

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். எனக்கு விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கு பல்வேறு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். நான் சிகிச்சை பெற்றதற்கான மருத்துவ பில்கள் (எண்ணிக்கை–69) ரூ.3,32,431.50/–. அந்த மருத்துவ பில்கள் அசல் **ம.சா.ஆ.15** ஆகும்.

**<u>2–ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

விபத்து ஏற்பட்டவுடன் தஞ்சாவூர் ரோகிணி மருத்துவமனையில் ஒரு மாத காலம் சிகிச்சை பெற்று உடல்நலம் தேறியவுடன் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு வீட்டிற்கு வந்துவிட்டேன். டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட பிறகு இந்த வழக்கினை தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். வழக்குடன் நான் மருத்துவ சிகிச்சை பெற்றதற்கான அனைத்து ஆவணங்களையும் மெடிக்கல் பில் உட்பட தாக்கல் செய்துள்ளேன். டிஸ்சார்ஜ் சம்மரியில் தங்களுக்கு உடல்நலம் முழுவதும் சரியாகிவிட்டது என்ற குறிப்புடன் தான் டிஸ்சார்ஜ் சம்மரி கொடுக்கப்பட்டு அது தங்களால் சமூக நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் இந்த வழக்கை கூடுதலான இழப்பீடு தொகை பெற வேண்டும் என்பதற்காக பின் யோசனை செய்து மருத்துவ ரசீதுகளை தற்போது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள இந்த மருத்துவ ரசீதுகளின் அடிப்படையில் எனக்கு இழப்பீடு தொகை கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை – இல்லை.</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.